محمد صلى الله عليه وسلم

وَمَآ أَرۡسَلۡنَٰكَ إِلَّا رَحۡمَةٗ لِّلۡعَٰلَمِينَ

(நபியே!) நாம் உம்மை அகிலத்தாருக்கு எல்லாம் ஓர் அருட் கொடையாகவேயன்றி அனுப்பவில்லை.

அல்குர்ஆன் 21:107

هداية

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# குர்ஆன் கூறும் நபி (ﷺ) அவர்களின் உயர்ந்த பண்புகள்

அல்கோபர் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு

## மகத்தான நற்குணம்

وَاِنَّكَ لَعَلٰى خُلُقٍ عَظِيْمٍ

நிச்சயமாக நீர் மகத்தான நற்குணத்தின் மீது இருக்கிறீர்.

ஸூரத்து அல்-கலம் 68 : 4

# குர்ஆன் கூறும் நபி (ﷺ) அவர்களின் உயர்ந்த பண்புகள்

2

## அழகிய முன்மாதிரி

لَقَدْ كَانَ لَكُمْ فِىْ رَسُوْلِ اللّٰهِ اُسْوَةٌ حَسَنَةٌ لِّمَنْ كَانَ
يَرْجُوا اللّٰهَ وَالْيَوْمَ الْاٰخِرَ وَذَكَرَ اللّٰهَ كَثِيْرًا

நிச்சயமாக, அல்லாஹ்வையும் இறுதி நாளையும் எதிர்பார்த்து, அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூர்பவர்களுக்கு அல்லாஹ்வின் தூதரிடம் அழகிய முன்மாதிரி இருக்கிறது.

ஸூரத்து அல்-அஹ்ஸாப் 32 : 21

يَآيُّهَا النَّبِيُّ اِنَّآ اَرۡسَلۡنٰكَ شَاهِدًا وَّمُبَشِّرًا وَّنَذِيۡرًا

وَّدَاعِيًا اِلَى اللّٰهِ بِاِذۡنِهٖ وَسِرَاجًا مُّنِيۡرًا

நபியே! நிச்சயமாக நாம் உம்மை சாட்சியாகவும்,
நற்செய்தி கூறுபவராகவும், எச்சரிக்கை
செய்பவராகவும் அனுப்பியுள்ளோம்.

மேலும், அவனது அனுமதியால்
அல்லாஹ்வின்பால் அழைப்பவராகவும்,
ஒளி வீசும் விளக்காகவும் (அனுப்பியுள்ளோம்).

ஸூரத்து அல்-அஹ்ஸாப் 33 : 45-46

# குர்ஆன் கூறும் நபி (ﷺ) அவர்களின் உயர்ந்த பண்புகள்

4

إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّ ۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ
ءَامَنُوا۟ صَلُّوا۟ عَلَيْهِ وَسَلِّمُوا۟ تَسْلِيمًا

நிச்சயமாக அல்லாஹ்வும் அவனுடைய மலக்குகளும் நபியின் மீது ஸலவாத் கூறுகின்றனர். ஈமான் கொண்டவர்களே! நீங்களும் அவர் மீது ஸலவாத் கூறி முழுமையாக ஸலாம் கூறுங்கள்.

ஸூரத்து அல்-அஹ்ஸாப் 33 : 56

# குர்ஆன் கூறும் நபி (ﷺ) அவர்களின் உயர்ந்த பண்புகள்

5

لَقَدْ جَآءَكُمْ رَسُوْلٌ مِّنْ اَنْفُسِكُمْ عَزِيْزٌ عَلَيْهِ مَا
عَنِتُّمْ حَرِيْصٌ عَلَيْكُمْ بِالْمُؤْمِنِيْنَ رَءُوْفٌ رَّحِيْمٌ

நிச்சயமாக உங்களிலிருந்தே ஒரு தூதர் உங்களிடம் வந்துள்ளார். நீங்கள் துன்பப்படுவது அவருக்கு மிகவும் வருத்தமாக உள்ளது. அவர் உங்கள் நன்மையில் மிகுந்த அக்கறை கொண்டவர். முஃமின்களிடம் மிகவும் பரிவும் கருணையும் உடையவராக இருக்கிறார்.

ஸூரத்து அத்-தௌபா 9 : 128

# குர்ஆன் கூறும் நபி (ﷺ) அவர்களின் உயர்ந்த பண்புகள்

6

مَا كَانَ مُحَمَّدٌ اَبَآ اَحَدٍ مِّنۡ رِّجَالِكُمۡ وَلٰـكِنۡ رَّسُوۡلَ اللّٰهِ
وَخَاتَمَ النَّبِيّٖنَ‌ ؕ وَكَانَ اللّٰهُ بِكُلِّ شَىۡءٍ عَلِيۡمًا

முஹம்மது உங்கள் ஆண்களில் எவருடைய தந்தையுமல்லர். ஆனால் அவர் அல்லாஹ்வின் தூதரும் நபிமார்களின் இறுதி முத்திரையுமாவார். அல்லாஹ் எல்லாப் பொருட்களையும் நன்கறிந்தவனாக இருக்கின்றான்.

ஸூரத்து அல்-அஹ்ஸாப் 33 : 40

# குர்ஆன் கூறும் நபி (ﷺ) அவர்களின் உயர்ந்த பண்புகள்

7

فَبِمَا رَحْمَةٍ مِّنَ اللّٰهِ لِنْتَ لَهُمْ ۚ وَلَوْ كُنْتَ فَظًّا غَلِيْظَ الْقَلْبِ
لَانْفَضُّوْا مِنْ حَوْلِكَ ۖ فَاعْفُ عَنْهُمْ وَاسْتَغْفِرْ لَهُمْ وَشَاوِرْهُمْ فِى
الْاَمْرِ ۚ فَاِذَا عَزَمْتَ فَتَوَكَّلْ عَلَى اللّٰهِ ؕ اِنَّ اللّٰهَ يُحِبُّ الْمُتَوَكِّلِيْنَ ﴿١٥٩﴾

அல்லாஹ்வுடைய ரஹ்மத்தின் காரணமாகவே நீர் அவர்களிடம் மென்மையாக (கனிவாக) நடந்து கொள்கிறீர், (சொல்லில்) நீர் கடுகடுப்பானவராகவும், கடின சித்தமுடையவராகவும் இருந்திருப்பீரானால், அவர்கள் உம் சமூகத்தை விட்டும் ஓடிப்போயிருப்பார்கள், எனவே அவர்களின் (பிழைகளை) அலட்சியப்படுத்திவிடுவீராக, அவ்வாறே அவர்களுக்காக மன்னிப்புத் தேடுவீராக! தவிர, சகல காரியங்களிலும் அவர்களுடன் கலந்தாலோசனை செய்யும், பின்னர் (அவை பற்றி) நீர் முடிவு செய்து விட்டால் அல்லாஹ்வின் மீதே பொறுப்பேற்படுத்துவீராக! - நிச்சயமாக அல்லாஹ் தன் மீது பொறுப்பேற்படுத்துவோரை நேசிக்கின்றான்.

அல்குர்ஆன் 3:159

وَاخْفِضْ جَنَاحَكَ لِمَنِ اتَّبَعَكَ
مِنَ الْمُؤْمِنِينَ ﴿٢١٥﴾

மேலும், உம்மைப் பின்பற்றி நடக்கும் முஃமின்களிடத்தில் தோள்தாழ்த்தி (கனிவுடன்) நடந்து கொள்வீராக!.

அல்குர்ஆன் 26:215

# குர்ஆன் கூறும் நபி (ﷺ) அவர்களின் உயர்ந்த பண்புகள்

9

خُذِ الْعَفْوَ وَأْمُرْ بِالْعُرْفِ وَأَعْرِضْ عَنِ الْجَٰهِلِينَ ١٩٩

எனினும் (நபியே) மன்னிப்பைக் கைக்கொள்வீராக! நன்மையைக் கடைபிடிக்குமாறு (மக்களை) ஏவுவீராக! மேலும் அறிவீனர்களைப் புறக்கணித்து விடும்.

அல்குர்ஆன் 7:199

فَلَعَلَّكَ بَاخِعٌ نَّفۡسَكَ عَلٰۤى اٰثَارِهِمۡ اِنۡ لَّمۡ
يُؤۡمِنُوۡا بِهٰذَا الۡحَدِيۡثِ اَسَفًا ۝٦

(நபியே!) இவ்வேதத்தை அவர்கள்
நம்பிக்கை கொள்ளாவிட்டால் அதற்காக
நீர் துக்கித்து அவர்களின் அடிச்சுவடுகள்
மீது உமது உயிரை அழித்துக் கொள்வீரோ!
(ஆகவே, அதற்காக நீர் கவலைப்படாதீர்.)

அல்குர்ஆன் 18:6

لَعَلَّكَ بَاخِعٌ نَّفۡسَكَ اَلَّا يَكُوۡنُوۡا
مُؤۡمِنِيۡنَ ۝٣

(நபியே!) அவர்கள் (அல்லாஹ்வை) விசுவாசம் கொள்பவர்களாக இல்லாததின் காரணமாக (துக்கத்தால்) உம்மை நீரே அழித்துக்கொள்வீர் போலும்!

அல்குர்ஆன் 26:3

# குர்ஆன் கூறும் நபி (ﷺ) அவர்களின் உயர்ந்த பண்புகள்

12-A

اَلَّذِيْنَ يَتَّبِعُوْنَ الرَّسُوْلَ النَّبِىَّ الْاُمِّىَّ الَّذِىْ
يَجِدُوْنَهٗ مَكْتُوْبًا عِنْدَهُمْ فِى التَّوْرٰىةِ
وَالْاِنْجِيْلِ يَاْمُرُهُمْ بِالْمَعْرُوْفِ وَيَنْهٰهُمْ عَنِ
الْمُنْكَرِ وَيُحِلُّ لَهُمُ الطَّيِّبٰتِ وَيُحَرِّمُ عَلَيْهِمُ
الْخَبٰٓئِثَ وَيَضَعُ عَنْهُمْ اِصْرَهُمْ وَالْاَغْلٰلَ الَّتِىْ
كَانَتْ عَلَيْهِمْ‌ ؕ فَالَّذِيْنَ اٰمَنُوْا بِهٖ وَعَزَّرُوْهُ
وَنَصَرُوْهُ وَاتَّبَعُوا النُّوْرَ الَّذِىْۤ اُنْزِلَ مَعَهٗۤ ‌ۙ
اُولٰٓئِكَ هُمُ الْمُفْلِحُوْنَ ۝١٥٧

அல்குர்ஆன் 7:157

# குர்ஆன் கூறும் நபி (ﷺ) அவர்களின் உயர்ந்த பண்புகள்

12-B

எவர்கள் எழுதப்படிக்கத் தெரியாத நபியாகிய நம் தூதரைப் பின்பற்றுகிறார்களோ - அவர்கள் தங்களிடமுள்ள தவ்ராத்திலும் இன்ஜீலிலும் இவரைப் பற்றி எழுதப் பட்டிருப்பதைக் காண்பார்கள், அவர், அவர்களை நன்மையான காரியங்கள் செய்யுமாறு ஏவுவார், பாவமான காரியங்களிலிருந்து விலக்குவார், தூய்மையான ஆகாரங்களையே அவர்களுக்கு ஆகுமாக்குவார், கெட்டவற்றை அவர்களுக்குத் தடுத்து விடுவார், அவர்களுடைய பளுவான சுமைகளையும், அவர்கள் மீது இருந்த விலங்குகளையும், (கடினமான கட்டளைகளையும்) இறக்கிவிடுவார், எனவே எவர்கள் அவரை மெய்யாகவே நம்பி, அவரைக் கண்ணியப்படுத்தி, அவருக்கு உதவி செய்து, அவருடன் அருளப்பட்டிருக்கும் ஒளிமயமான (வேதத்)தையும் பின் பற்றுகிறார்களோ, அவர்கள் தாம் வெற்றி பெறுவார்கள்.

அல்குர்ஆன் 7:157

# குர்ஆன் கூறும் நபி (ﷺ) அவர்களின் உயர்ந்த பண்புகள்

13

وَمَآ أَرۡسَلۡنَٰكَ إِلَّا
رَحۡمَةٗ لِّلۡعَٰلَمِينَ ١٠٧

(நபியே!) நாம் உம்மை
அகிலத்தாருக்கு எல்லாம்
ரஹ்மத்தாக - ஓர் அருட்
கொடையாகவேயன்றி
அனுப்பவில்லை.

அல்குர்ஆன் 21:107

# குர்ஆன் கூறும் நபி (ﷺ) அவர்களின் உயர்ந்த பண்புகள்

14

وَاصْبِرْ وَمَا صَبْرُكَ اِلَّا بِاللّٰهِ وَلَا تَحْزَنْ
عَلَيْهِمْ وَلَا تَكُ فِىْ ضَيْقٍ مِّمَّا يَمْكُرُوْنَ ﴿١٢٧﴾

(நபியே!) இன்னும் நீர் பொறுமையுடன் இருப்பீராக, எனினும் அல்லாஹ்வின் உதவியில்லாமல் நீர் பொறுமையுடனே இருக்க முடியாது - அவர்களுக்காக நீர் (எது பற்றியும்) கவலைப்பட வேண்டாம் - அவர்கள் செய்யும் சூழ்ச்சிகளை பற்றி நீர் (மன) நெருக்கடியில் ஆகிவிடவேண்டாம்.

அல்குர்ஆன் 16:127

# குர்ஆன் கூறும் நபி (ﷺ) அவர்களின் உயர்ந்த பண்புகள்

15-A

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَدْخُلُوْا بُيُوْتَ النَّبِىِّ اِلَّاۤ اَنْ
يُّؤْذَنَ لَـكُمْ اِلٰى طَعَامٍ غَيْرَ نٰظِرِيْنَ اِنٰٮهُ ۙ وَلٰـكِنْ اِذَا
دُعِيْتُمْ فَادْخُلُوْا فَاِذَا طَعِمْتُمْ فَانْتَشِرُوْا وَلَا
مُسْتَاْنِسِيْنَ لِحَدِيْثٍ ؕ اِنَّ ذٰلِكُمْ كَانَ يُؤْذِى النَّبِىَّ
فَيَسْتَحْىٖ مِنْكُمْ ۖ وَاللّٰهُ لَا يَسْتَحْىٖ مِنَ الْحَـقِّ ؕ وَاِذَا
سَاَلْتُمُوْهُنَّ مَتَاعًا فَسْـئَلُوْهُنَّ مِنْ وَّرَآءِ حِجَابٍ ؕ
ذٰلِكُمْ اَطْهَرُ لِقُلُوْبِكُمْ وَقُلُوْبِهِنَّ ؕ وَمَا كَانَ لَـكُمْ اَنْ
تُؤْذُوْا رَسُوْلَ اللّٰهِ وَلَاۤ اَنْ تَنْكِحُوْۤا اَزْوَاجَهٗ مِنْۢ بَعْدِهٖۤ
اَبَدًا ؕ اِنَّ ذٰلِكُمْ كَانَ عِنْدَ اللّٰهِ عَظِيْمًا ﴿٥٣﴾

அல்குர்ஆன் 33:53

# குர்ஆன் கூறும் நபி (ﷺ) அவர்களின் உயர்ந்த பண்புகள்

15-B

முஃமின்களே! (உங்களுடைய நபி) உங்களை
உணவு அருந்த அழைத்தாலன்றியும், அது
சமையலாவதை எதிர்பார்த்தும் (முன்னதாகவே)
நபியுடைய வீடுகளில் பிரவேசிக்காதீர்கள்,
ஆனால், நீங்கள் அழைக்கப்பட்டீர்களானால்
(அங்கே) பிரவேசியுங்கள், அன்றியும்
நீங்கள் உணவருந்தி விட்டால் (உடன்) கலைந்து
போய் விடுங்கள், பேச்சுகளில்
மனங்கொண்டவர்களாக (அங்கேயே)
அமர்ந்து விடாதீர்கள், நிச்சயமாக இது நபியை
நோவினை செய்வதாகும், இதனை
உங்களிடம் கூற அவர் வெட்கப்படுவார்,
ஆனால் உண்மையைக் கூற
அல்லாஹ் வெட்கப்படுவதில்லை

அல்குர்ஆன் 33:53

# குர்ஆன் கூறும் நபி (ﷺ) அவர்களின் உயர்ந்த பண்புகள்

16

يَٰٓأَيُّهَا ٱلنَّبِيُّ إِنَّآ أَرْسَلْنَٰكَ شَٰهِدًا وَمُبَشِّرًا وَنَذِيرًا ﴿٤٥﴾

وَدَاعِيًا إِلَى ٱللَّهِ بِإِذْنِهِۦ وَسِرَاجًا مُّنِيرًا ﴿٤٦﴾

وَبَشِّرِ ٱلْمُؤْمِنِينَ بِأَنَّ لَهُم مِّنَ ٱللَّهِ فَضْلًا كَبِيرًا ﴿٤٧﴾

நபியே! நாம் நிச்சயமாக உம்மைச் சாட்சியாகவும், நன்மாராயங் கூறுபவராகவும், அச்சமூட்டி எச்சரிப்பவராகவுமே அனுப்பியுள்ளோம்.

இன்னும் அல்லாஹ்வின் பால் (மனிதர்களை) - அவன் அனுமதிப்படி - அழைப்பவராகவும், பிரகாசிக்கும் விளக்காகவும் (உம்மை அனுப்பியுள்ளோம்.)

எனவே! முஃமின்களுக்கு - அல்லாஹ்விடமிருந்து அவர்களுக்கு நிச்சயமாக பேரருட்கொடை இருக்கிறதென நன்மாராயங் கூறுவீராக!

அல்குர்ஆன் 33:45-47

# குர்ஆன் கூறும் நபி (ﷺ) அவர்களின் உயர்ந்த பண்புகள்

17

إِنَّآ أَرْسَلْنَٰكَ بِٱلْحَقِّ بَشِيرًا وَنَذِيرًا ۖ وَلَا تُسْـَٔلُ عَنْ أَصْحَٰبِ ٱلْجَحِيمِ ١١٩

(நபியே!) நாம் உம்மை உண்மையுடன், (நல்லடியாருக்கு) நன்மாராயம் கூறுபவராகவும், (தீயோருக்கு) அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவுமே அனுப்பியுள்ளோம், நரகவாதிகளைப் பற்றி நீர் வினவப்பட மாட்டீர்.

அல்குர்ஆன் 2:119

# குர்ஆன் கூறும் நபி (ﷺ) அவர்களின் உயர்ந்த பண்புகள்

18

وَمَآ اَرۡسَلۡنٰكَ اِلَّا كَآفَّةً لِّلنَّاسِ بَشِيۡرًا وَّنَذِيۡرًا وَّلٰـكِنَّ
اَكۡثَرَ النَّاسِ لَا يَعۡلَمُوۡنَ ﴿۲۸﴾

இன்னும், (நபியே!) நாம் உம்மை மனித குலம் முழுமைக்கும் நன்மாராயங் கூறுபவராகவும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவுமேயன்றி அனுப்பவில்லை, ஆனால் மனிதர்களில் பெரும்பாலானவர்கள் (இதை) அறியமாட்டார்கள்.

அல்குர்ஆன் 34:28

# குர்ஆன் கூறும் நபி (ﷺ) அவர்களின் உயர்ந்த பண்புகள்

19

إِنَّآ أَرْسَلْنَٰكَ بِٱلْحَقِّ بَشِيرًا وَنَذِيرًا ۚ وَإِن مِّنْ أُمَّةٍ
إِلَّا خَلَا فِيهَا نَذِيرٌ ﴿٢٤﴾

நிச்சயமாக நாம் உம்மை உண்மையைக் கொண்டு, நன்மாராயங் கூறுபவராகவும், அச்சமூட்டி எச்சரிப்பவராகவுமே அனுப்பியுள்ளோம், அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர் வராத எந்த சமுதாயத்தவரும் (பூமியில்) இல்லை.

அல்குர்ஆன் 35:24